# சென்ட்ரலில் மின்னொளி அலங்காரம்

சென்னை, மார்ச் 3–

சென்ட்ரல் மெட்ரோ நிலையம், தனித்துவமாக தெரியும் நோக்கில், நுழைவாயில் பகுதியில், ஜனாதிபதி மாளிகை, இந்தியா கேட் வடிவில், மின்னொளி அலங்காரம் செய்யப்பட உள்ளது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த இரண்டு பாதைகளின் சந்திப்பு நிலையமாகவும், பெரிய நிலையமாகவும், சென்ட்ரல் மெட்ரோ நிலையம் உள்ளது.



■ சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தின், மின் தூக்கிகள், வண்ண மின்விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையத்தை தனித்துவமான இடமாக தெரிய செய்யும் வகையில், மெட்ரோ சுரங்கபாதைக்கு செல்லும், 12 மின் தூக்கி வாயில்களிலும், மின்னொளி அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

நிலையத்தின் ஆறு நுழைவாயில்களிலும், ஜனாதிபதி மாளிகை, இந்தியா கேட், ஹவுரா பாலம், கேன்டன் கோபுரம், சியோல் கோபுரம் வடிவில், மின்னொளி அலங்காரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துடன், அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையம் அருகில், கண்ணாடியில், மின்னொளியுடன் கூடிய, இரண்டு வாயில்கள் அமைக்கப்பட உள்ளது என, மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.